**வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் - 2014**

வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 5 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213 ''அ'' பிரிவு மற்றும் 237 ஆம் பிரிவின் கீழ் 2005 ஏப்ரல் 04 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்ட மரணமடைந்த மற்றும் காயங்களுக்குள்ளானவர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 850,000 ஆன இழப்பீட்டுத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

இரண்டு வாகனங்களுக்காக பெற்றுக்கொண்ட ரூபா 83,400 தொகையான எரிபொருக்காக வாகன இலக்கம் மற்றும் திகதி என்பவற்றைக் கொண்டிராத பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| i. 8(2) ஆம் பிரிவு | ரூபா 1,027,785 கூட்டுத்தொகைக்கு கொள்வனவு செய்த சொத்துக்கள் உத்தேச பாதீட்டிலோ அல்லது ஐந்தொகையிலோ உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| ii. | 8(3) ஆம் பிரிவு | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரமின்றி ரூபா 2,904,902 ஆன மூலதனச் செலவினத்திற்காக கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| iii. | 10(5)(1) ஆம் பிரிவு | 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை மன்றத்தால் உழைத்த தேறிய மிகையான ரூபா 180,834,459 தொகையை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கவோ அல்லது மிகைத் தொகையை தற்காலிகமாக திறைசேரியில் வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv. | 10(5)(1)(ஏ)(பீ) பிரிவு | மன்றத்தினால் மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்திற்குரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளாமல் திறைசேரி உண்டியலின் கீழ் ரூபா 17,857,585 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 3 மற்றும் 4 | செலவினத் திட்டமொன்றும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் தயாரித்து செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றிற்காக முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான திட்டமொன்று இல்லாமல் ரூபா 556,500 தொகை மன்றத்தினால் முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அம் முற்பணத் தொகையில் 65 சதவீதத்திற்கு குறைந்த தொகையொன்று செலவிடப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 135 | மன்றத்தை தாபிப்பதற்குரிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரொன்று நியமிக்கப்பட்டு முறையான பிரகாரம் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 138 மற்றும் 139 | இழப்பீட்டுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் சான்றுறுதிப்படுத்தியதாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் முத்திரை பொறித்து கையொப்பமிடாமல் ரூபா 06 இலட்சம் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 165(2) மற்றும் நிதிப் பிரமாணம் 177(2) | மன்றத்திற்கு கிடைக்கப்பெறும் பணம் மற்றும் காசோலைகள் என்பவற்றை பதிவு செய்வதற்காக காசோலை, காசு மற்றும் காசுக் கட்டளை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) | இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த செயலமர்வு மற்றும் படிகளுக்காக ரூபா 481,750 தொகையான முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை அச் செயற்பாட்டிற்கே ரூபா 512,500 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (vi) | நிதிப் பிரமாணம் 371(2)(அ)(ஆ) | சில்லறைக் காசு கட்டுநிதி வழங்குவதற்குப் பதிலாக செயல்நிமித்த கட்டுநிதியாக வழங்கப்பட்ட ரூபா 15,000 தொகையும், குழாம் வாகனங்களுக்கு எரிபொருள் கொள்வனவிற்காக முற்பணமாக பல சந்தர்ப்பங்களில் ரூபா 44,000 தொகையும் வழங்கப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| | | போதிலும், அச்செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கு 1½ மாதத்திலிருந்து 10 மாத காலம் தாமதமாகியிருந்தன. |
| (vii) | நிதிப் பிரமாணம் 371(5) | சில்லறைக் காசு கட்டுநிதியாக 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 2,000 தொகை அவ்வாண்டிலேயே தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய போதிலும், இதுவரை 8 ஆண்டுகள் கடந்திருந்த அத்தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப் பிரமாணம் 752 | ரூபா 154,980 பெறுமதியான கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட் பெறுவனவுகளை குறித்த நுகர்வுப் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்த லொன்று இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ix) | நிதிப் பிரமாணம் 756 மற்றும் 754 | மன்றத்திற்குச் சொந்தமான மீளாய்வாண்டில் இடம்பெற்ற ரூபா 3,074,476 தொகையான சொத்துக்கள் மற்றும் ஏனைய ஆதனங்களுக்காக குறித்த ஆண்டிலேயே பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகளின் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) கொள்வனவு வழிகாட்டல் கோவை

| | | |
|---|---|---|
| I. | 3.4.1 வழிகாட்டி | சாப்பு முறைமையின் கீழ் பொருட்கள் சேவைகள் கொள்வனவு செய்வதற்காக ஆகக் குறைந்தது 03 திறந்த விலை |

| | | |
|---|---|---|
| | | மனுக்கள் மூலம் வழங்குனர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டில் ரூபா 183,824 தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| II. | 4.2.2 வழிகாட்டி | மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 22.4 மில்லியன் பெறுமதியான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்களுக்காக கொள்வனவு கால அட்டவணையொன்று கிரமமாக தயாரிக்கப்படாமல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் இம்மன்றம் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்படாமல் இருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் வரி கொடுப்பனவு தேவைப்பாட்டை இனங்கண்டு வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது மன்றத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 27,647,004 மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டில் ரூபா 33,965,367 மிகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,318,363 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. மன்றத்தின் பிரதான வருமான மூலமான காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற பங்களிப்பு அதிகரித்திருந்த போதிலும், திறைசேரி உண்டியல், நிலையான வைப்பு வட்டி வருமானம் குறைவடைந்தமையும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செலவினத்தில் 98 சதவீதமான அதிகரிப்பும், வீழ்ச்சியடைவது தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கான பங்களிப்பு

மன்றத்தின் உருவாக்கத்தின் 11 பிரதான செயற்பாடுகள் குறிப்பாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குட்பட்டவர்களுக்கு இழப்பீட்டைச் செலுத்துதல் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்ற 02 செயற்பாடுகள் மாத்திரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தன. ஏனைய செயற்பாடுகளுக்காக நீண்டகாலத்திட்டத்திற்கு அல்லது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. மன்றத்தால் அச்செயற்பாடுகள் இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டமைக்காக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. அந்நோக்கங்களையும் செயற்பாடுகளையும் பின்வருமாறு இனங்கண்டு கொள்ளலாம்.

(i) வாகனங்களின் அளவு, வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச கணனித் தரவுக் களஞ்சியமொன்றைப் பேணிச்செல்லல்.

(ii) வீதிப் பாதுகாப்பு விடயம் தொடர்பாக நூலகமொன்றை பராமரித்துச்செல்லல்

(iii) தொடர்புடைய விடயங்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் களப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

(iv) தொடர்புடைய விடயங்கள் மீதான ஆராய்ச்சிகளுக்கு உதவியளித்தல்.

(v) ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அனுபவங்கள் குறித்த அறிவினை பரிமாறிக் கொள்ளல்.

(vi) வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய விடயங்களுக்கான செயற்திட்டங்கள் தொடர்பில் பொறுப்பினை வகிக்கும் அரசாங்க

மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அறிவினையும் தகவல்களையும் வழங்குதல்.

(vii) அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைத்தல்.

(viii) வீதிப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

(ix) வீதிப் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்,

**(ஆ) இழப்பீடு செலுத்துவதின் முன்னேற்றம்**

மன்றத்திடம் வீதி வாகன விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிபர பதிவேட்டுத் தரவுகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தகவல்களின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 10 ஆண்டு காலப்பகுதியில் 81,459 பயங்கர மற்றும் கடுமையான விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் அவ்விபத்துக்களில் இனங்காணப்படாத வாகனங்களினால் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தொடர்பான தகவல்கள் மன்றத்திடம் காணப்படவில்லை. 2014 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட பயங்கர மற்றும் கடுமையான விபத்துக்கள் 8,949 ஆக இருந்தன. எனினும் அவ்வாண்டில் இழப்பீட்டிற்காக 63 விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தன. எவ்வாறாயினும் இந்த 10 ஆண்டு காலப்பகுதியில் மன்றத்திற்கு 299 இழப்பீடு கோரல் விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 171 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் ரூபா 8,035,000 தொகையான இழப்பீட்டுத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) இழப்பீடு செலுத்துவதில் தாமதம்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளிலும் கிடைக்கப்பெற்றிருந்த 63 விண்ணப்பங்களில் 23 விண்ணப்பங்களிற்காக ரூபா 1,695,000 தொகை மீளாய்வாண்டின் போது இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. விண்ணப்பங்கள் கிடைத்த திகதி மற்றும் இழப்பீடு செலுத்தப்பட்ட திகதி என்பவற்றிற்கிடையே போதியளவு காலதாமதம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், அக்காலதாமதத்தை குறைப்பதற்கு தேவையான நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு மன்றம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

முன்னைய ஆண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த 16 விண்ணப்பங்களுக்காக ரூபா 1,555,000 தொகையும், 03 இழப்பீட்டு விண்ணப்பங்களுக்காக 02 ஆண்டு முதல் 03 ஆண்டு வரை காலதாமதத்தின் பின்னர் ரூபா 110,000 தொகையும், ஒரு விண்ணப்பத்திற்காக 04 ஆண்டு காலதாமதத்தின் பின்னர் ரூபா 30,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) காப்புறுதி வருமானம் அனுப்புவதில் தாமதம்**

(i) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 1368/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மாதிரிப் படிவ இலக்கம் 01 இன் பிரகாரம் ஒவ்வொரு காப்புறுதி கம்பனியாலும் அறவிடப்படுகின்ற பங்களிப்புத் தொகையை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மன்றத்தினால் ரூபா 189,839 தொகையான பெறவேண்டிய பங்களிப்புத் தொகை அத்திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கட்டளை இலக்கம் 02 இன் பிரகாரம் காப்புறுதி உரித்தொன்று அல்லது பிணையொன்று சமர்ப்பிப்பதற்காக காப்புறுதி கம்பனியால் சேகரித்து மன்றத்திற்கு மீளாய்வாண்டின் போது அனுப்பிய ஒரு சதவீத வருமானமான ரூபா 32,447,870 ஆன வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் முறைமையொன்று சபையிடம் காணப்படவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**(அ) நியதிச்சட்ட நிறுவனமொன்றாக தாபிக்கப்படாமை**

வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 213(அ) பிரிவின் பிரகாரம் 2005 ஏப்ரல் மாதத்தில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்தது. இம்மன்றம் 2010 ஆகஸ்ட் மாதத்தில் வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்திற்குப் பதிலாக அதன் அமைப்பு, கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் உட்படுத்தப்பட்ட புதிய அதிகாரச்சட்டமொன்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது உட்பட 04 விடயங்களுக்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு

அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறித்த அங்கீகாரம் கிடைத்து 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் நியதிச்சட்ட நிறுவனமொன்றாக தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்ளல்**

திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய குழு உத்தியோகத்தர்களால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு அது திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்காக பொறுப்பேற்க வேண்டிய போதிலும் மன்றம் மீளாய்வாண்டில் அமுல்படுத்திய ரூபா 10.3 மில்லியன் மதிப்பிடப்பட்ட செயற்திட்டம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் குறித்த செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டில் தகவல்களை உள்ளடக்குவதற்கு முன்னர் வருடாந்த மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அச்செலவினம் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 22.4 மில்லியன் தொகையான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பாதீட்டில் ரூபா 6.15 மில்லியன் தொகைக்குரிய திட்டங்களே மதிப்பிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 16.25 மில்லியன் தொகை குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் உரிய ஆய்வொன்று மூலம் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்களை செயற்படுத்தாமை**

மன்றத்தின் செயற்திட்டங்கள் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 23

உபகருத்திட்டங்களில் 15 அதாவது ரூபா 12.1 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் கூடிய உப கருத்திட்டங்கள், குறித்த ஆண்டின் போதும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அங்கீகரிக்கப்படாத செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

மூலதன செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதற்காக விரிவான மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மன்றத்தினால் அவ்வாறு அங்கீகாரமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் செலவின மதிப்பீடொன்றும் இல்லாமல் மிதிவண்டிகளில் ஸ்டிகர் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சர்வதேச வலது குறைந்தோர் தினத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற 02 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே ரூபா 1,943,202 தொகையும் ரூபா 418,566 தொகையும் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 8(1) ஆம் பிரிவின் பிரிகாரம் கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடொன்று தயாரித்து நிர்வாக சபையினால் அங்கீகரித்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 31.5 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 9.9 மில்லியன் செலவினத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்காக நிர்வாகச் சபையொன்றோ இல்லாதிருந்தமையால் உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

மன்றத்தின் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முதலீடு மற்றும் வட்டிக் கணிப்பீடு

(இ) காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பினை இனங்காண்பதும் அனுப்பி வைப்பதற்கான செயற்பாடுகளும்

(ஈ) நட்டஈட்டுக் கொடுப்பனவுச் செயற்பாடு

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஊ) முற்பணம்

(எ) சில்லறைக் காசேடொன்றைப் பேணிச் செல்லல்